**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், புரட்டாசித்திங்கள் 31ம் நாள்

**இ.ம.எண்.14/2025**

**in**

**அ.வ.எண்.221/2018**

சவுண்டம்மாள் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. சுப்பிரமணியம் (இறந்துவிட்டார்)
By LRS ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
2. மதியழகன்
3. அமுதவள்ளி ... 2, 3 எதிர்மனுதாரர்கள்/
2, 3 பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 06.10.2025ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.C.ஜெயசங்கர், M.B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.L.பிரபாகரன், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதியை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்களையும், வழக்காவணங்களையும் பரிசீலனை செய்து, இதுநாள் வரை இந்நீதிமன்ற சீரான பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்.

## உத்தரவு

மனுதாரர்/வாதி தரப்பில் கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், வட்டாட்சியர் அவர்களை நீதிமன்றத்திற்கு அழைத்து சாட்சியம் அளிக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1 & 2 ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :-

i) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் மீது தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரின் தகப்பனார் கிருஷ்ணசாமி செட்டியாருக்கு மல்லம்மாள் என்ற மனைவியும், மனுதாரர் மற்றும் பூங்கொடி என்ற இரண்டு பெண்மக்களும் மனோகரன் என்ற ஆண்மகனும் உண்டு. தாவா சொத்து கிருஷ்ணசாமி செட்டியாருக்கு சுயராஜ்ஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி கிருஷ்ணசாமி செட்டியார் மேற்படி சொத்துக்களை அனுபவித்து வந்து கடந்த 25.04.1988 ம் தேதியில் எவ்வித ஆவணங்களும் எழுதி வைக்காமல் தன் மனைவி மல்லம்மாள் என்பவரையும் மூன்று மக்களையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார்.

ii) மேற்படி கிருஷ்ணசாமி செட்டியார் இறப்பிற்கு பின்னிட்டு மனுதாரரின் தாயார், மனுதாரர், மனுதாரரின் சகோதரி மற்றும் சகோதரர் ஆகியோர்கள் சேர்ந்து தாவா சொத்தைகளை பொதுவில் வைத்து அனுபவித்து வந்தார்கள். மேற்படி கிருஷ்ணசாமி செட்டியாரின் மனைவியும், மனுதாரரின் சகோதரி மற்றும் சகோதரரும் சேர்ந்து தாவா சொத்தில் அவருக்களுள் உண்டான பாத்தியத்தை

பொறுத்து பொதுவில் 4 ல் 3 பங்கினை 1 ம் பிரதிவாதிக்கு கடந்த 08.08.1995 ம் தேதியில் ஒரு கிரைய ஆவணத்தின் மூலம் விற்பனை செய்து கொடுத்து விட்டார்கள்.

iii) மேற்படி கிருஷ்ணசாமி செட்டியாரின் இதர வாரிசுகள் தாவா சொத்துகளில் 4 ல் 3 பங்கினை கிரயம் பெற்றதற்கு பின்னிட்டு மேற்படி சொத்துகளில் மனுதாரர் தனது பங்கை பொறுத்து எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கோ வேறு நபர்களுக்கோ எவ்வித விற்பனையும் செய்யாமல் 1 ம் பிரதிவாதியுடன் கூட்டாக அனுபவித்து வந்தார். மேற்படி தாவா சொத்துகளில் மனுதாரருக்குள்ள பங்குரிமையை பொறுத்து 4 ல் 1 பங்கை மனுதாரர் 1 ம் பிரதிவாதியின் மீது பாகப்பிரிவினைக்கும் தனிசுவாதீனத்திற்கும் வழக்கு தாக்கல் செய்து 1 ம் பிரதிவாதி இறந்து போனதற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளான 2, 3 பிரதிவாதிகளை கட்சி சேர்த்து மேற்படி வழக்கில் வாதி தரப்பில் வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது.

iv) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரர் இறந்துபோன கிருஷ்ணசாமி செட்டியாரின் வாரிசு என்பதை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்று பிரதிவாதிகள் எதிர்வாதம் செய்து வந்தார்கள். மனுதாரர் கடந்த 2016 ம் வருடம் இறந்துபோன கிருஷ்ணசாமி செட்டியாருக்கு வாரிசு சான்று கேட்டு கரூர் மாவட்டம் அரவக்குறிச்சியில் வட்டாட்சியர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்திருந்தார். அந்த மனுவின் பேரில் அரவக்குறிச்சி வருவாய் ஆய்வாளர் அறிக்கையில் அ.தி.மு/34/2016 நாள் : 18.08.2016 ம் தேதி மனுதாரருக்கு ஒரு அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பினை பொறுத்து மேற்படி இறந்துபோன

கிருஷ்ணசாமி செட்டியாரின் வாரிசுகள் விபரம் அடங்கிய கோப்புகள் கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

v) மேற்படி அரவக்குறிச்சி வட்டாட்சியர் அவர்களை இந்நீதிமன்றத்திற்கு வரவழைத்து சாட்சியாக விசாரித்தால் மேற்படி கிருஷ்ணசாமி செட்டியாரின் வாரிசுகள் பற்றிய விபரம் தெரிய வரும். ஆகவே மேற்படி அரவக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள கோப்புகளை பொறுத்து மனுதாரர் வழக்கில் சாட்சியம் அளிக்க மேற்படி அரவக்குறிச்சி வட்டாட்சியர் அவர்களை இந்நீதிமன்றத்திற்கு அழைத்து சாட்சியம் அளிக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், வட்டாட்சியர் அவர்களை இந்நீதிமன்றத்திற்கு வரவழைத்து சாட்சியம் அளித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்பதே மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**<u>2. 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம் :-</u>**

i) மனுதாரர் மனு பொய் மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி இவ்வெதிர் உரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளைத் தவிர மனுவில் கண்ட மற்ற சங்கதிகளை மனுதாரரே கண்டிப்பாக நிரூபனம் செய்ய வேண்டியது.

ii) வழக்குரை சங்கதிகளையே மீண்டும் இம்மனுவில் அப்படியே குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளார். கிருஷ்ணசாமி செட்டியாருக்கு மனுதாரர் வாரிசு என்பது

உண்மையல்ல. தாவா சொத்து கிருஷ்ணசாமி செட்டியாருக்கு கிரைய வகையில் சுயமாக பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி கிருஷ்ணசாமி செட்டியாரின் சட்டப்படியான வாரிசுகளிடமிருந்து 2ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் தாவா சொத்துக்களை கிரையம் பெற்று அனுபவித்து வந்து அவர் காலத்திற்கு பின்னிட்டு 2, 3 எதிர்மனுதாரர்கள் அனுபவித்து வருகிறார்கள் மனுதாரர் இம்மனுவில் கூறியுள்ள ஆவணம் குறித்து வழக்குரையிலோ, சாட்சியத்திலோ குறிப்பிடப்படவில்லை. மேற்படி ஆவணம் விசாரணையின் போது குறியீடும் செய்யப்படவில்லை. எனவே மேற்படி ஆவணம் குறித்து சாட்சிக்கு சம்மன் அனுப்பவும் மனுதாரருக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை.

iii) மனுதாரர் விண்ணப்பம் செய்ததாக கூறியுள்ள நிலையில் விண்ணப்பம் செய்ததை காட்டக்கூடிய விதத்தில் எந்த ஒரு ஆவணமும் மனுவுடன் தாக்கல் செய்யவில்லை. மேலும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள குறிப்பாணையானது ஜெராக்ஸ் நகலாகும். உண்மையிலேயே மனுதாரர் விண்ணப்பம் செய்து அவருக்கு குறிப்பாணை வழங்கப்பட்டிருப்பின் அதன் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார். வழக்குரையிலும் அது பற்றி கூறியிருப்பார். இதிலிருந்தே மேற்படி ஜெராக்ஸ் ஆவணமானது மனுதாரரால் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்பதும், அதன் அடிப்படையில் மனு தாக்கல் செய்து பரிகாரம் கோர மனுதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதும் தெளிவாகிறது.

iv) மேற்படி ஆவணத்திலேயே நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ளுமாறு தெளிவாக குறிப்பிட்டு மேற்படி நடிவடிக்கைகள் முற்றுப் பெற்றுள்ளன. மனுதாரர் மேற்படி குறிப்பாணையின் அடிப்படையில் ஏன் நீதிமன்றத்தை நாடவில்லை என்பதற்கான எவ்வித விளக்கங்களும் மனுவில்

குறிப்பிடப்படவில்லை. இதிலிருந்தே மனுதாரர் கிருஷ்ணசாமி செட்டியாரின் வாரிசு அல்ல என்பது தெளிவாகிறது. மேற்படி ஆவணமானது 2016 ம் ஆண்டு குறிப்பாணை என்று ஆவணத்திலேயே கண்டுள்ளது. இந்த வழக்கானது 2018 ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின்படி எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் 9 ஆண்டுகளாக இருந்து விட்டு தற்போது இந்த வழக்கிலும், அதை பற்றி எங்கும் குறிப்பிடாமல் இருந்து விட்டு, சாட்சிய விசாரணை எல்லாம் முடிவுற்று வாதுரைக்காக வழக்கு இறுதி வாய்தா போடப்பட்ட நிலையில் காலம் கடந்து பின் யோசனையின் விளைவாக ஒரு ஜெராக்ஸ் ஆவணத்தின் அடிப்படையில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது நிராகரிக்கப்பட வேண்டியதாகும்.

v) அரவக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் என்ன கோப்புகள் உள்ளன என்பதையும் அவற்றிற்கும் இந்த வழக்கிற்கும் என்ன தொடர்புடமை போன்ற எந்த விளக்கமும் மனுவில் குறிப்பிடவில்லை. மேலும் அரவக்குறிச்சி வட்டாட்சியர் வந்து வாதி தான் கிருஷ்ணசாமி செட்டியாரின் வாரிசு என்று கூற முடியுமா? அல்லது வாரிசு சான்றிதழ் வழங்க முடியுமா? வட்டாட்சியர் அலுவலக குறிப்பாணை என்று வாதி தாக்கல் செய்துள்ள ஆவணத்திலேயே நீதிமன்றத்தை நாட உத்தரவிட்டுள்ள நிலையில் வருவாய்துறையினரின் பங்கு அத்தோடு முடிந்து விடுகிறது. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. இரு தரப்பும் கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**5. தீர்வு:–**

மனுதாரர்/வாதி தரப்பில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரர் இறந்துபோன கிருஷ்ணசாமி செட்டியாரின் வாரிசு என்பதை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்று பிரதிவாதிகள் எதிர்வாதம் செய்து வந்தார்கள் என்றும் மனுதாரர் கடந்த 2016 ம் வருடம் இறந்துபோன கிருஷ்ணசாமி செட்டியாருக்கு வாரிசு சான்று கேட்டு கரூர் மாவட்டம் அரவக்குறிச்சியில் வட்டாட்சியர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்திருந்தார் என்றும் மேற்படி அறிவிப்பினை பொறுத்து மேற்படி இறந்துபோன கிருஷ்ணசாமி செட்டியாரின் வாரிசுகள் விபரம் அடங்கிய கோப்புகள் கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றும் எனவே கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், வட்டாட்சியர் அவர்களை இந்நீதிமன்றத்திற்கு வரவழைத்து சாட்சியம் அளித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டு 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்படி குறிப்பாணை ஆவணத்திலேயே நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ளுமாறு தெளிவாக குறிப்பிட்டு மேற்படி நடிவடிக்கைகள் முற்றுப் பெற்றுள்ளன என்றும் அரவக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் என்ன கோப்புகள் உள்ளன என்பதையும் அவற்றிற்கும் இந்த வழக்கிற்கும் என்ன தொடர்புடமை போன்ற எந்த விளக்கமும் மனுவில் குறிப்பிடவே இல்லை என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீனம் பரிகாரம் கோரி மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 15.11.2024 அன்று 2ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 09.12.2024 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு, கடந்த 15.07.2025 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 05.08.2025 அன்று வா.சா.2 விசாரிக்கப்பட்டு, கடந்த 12.08.2025 அன்று வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, கடந்த 26.08.2025 அன்று பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 19.09.2025 அன்று பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு அசல் வழக்கானது வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் கடந்த 25.09.2025 அன்று கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், வட்டாட்சியர் அவர்களை இந்நீதிமன்றத்திற்கு வரவழைத்து சாட்சியம் அளிக்க உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது 2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் வாதி கிருஷ்ணசாமி செட்டியாரின் வாரிசு என்று காட்டுவதற்கு எவ்வித ஆவணமும் வழக்குரையோடு தாக்கல் செய்யாததில் இருந்து வாதியின் வழக்கில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் வாதி தனது வாரிசுரிமையை காட்டுவதற்கு எவ்வித பதிவு செய்யப்பட்ட ஆவணங்களையும் வாரிசு சான்றிதழையும் வழக்குரையோடு தாக்கல் செய்யவில்லை என்றும் சொல்லப்பட்டுள்ளது.

8. வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்து அசல் வழக்கானது இறந்துபோன கிருஷ்ணசாமி செட்டியாரின் வாரிசு என்ற முறையில் பாகப்பிரிவினை பரிகாரத்திற்காக மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் கடந்த 2016ம் வருடம் இறந்துபோன கிருஷ்ணசாமி செட்டியாருக்கு வாரிசு சான்று கேட்டு கரூர் மாவட்டம் அரவக்குறிச்சியில் வட்டாட்சியர் அவர்களுக்கு விண்ணப்பம் செய்திருந்தார் என்றும் அந்த மனுவின் பேரில் அரவக்குறிச்சி வருவாய் ஆய்வாளர் அறிக்கையில் அ.தி.மு/34/2016 நாள் : 18.08.2016ம் தேதி மனுதாரருக்கு ஒரு அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றும் மேற்படி அரவக்குறிச்சி வட்டாட்சியர் அவர்களை இந்நீதிமன்றத்திற்கு வரவழைத்து சாட்சியாக விசாரித்தால் மேற்படி கிருஷ்ணசாமி செட்டியாரின் வாரிசுகள் பற்றிய விபரம் தெரிய வரும் என்றும் மனுதாரர் தரப்பில் இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாகவே உள்ளது.

9. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் அரவக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் என்ன கோப்புகள் உள்ளன என்பதையும் அவற்றிற்கும் இந்த வழக்கிற்கும் என்ன தொடர்புடமை போன்ற எந்த விளக்கமும் மனுவில் குறிப்பிடவில்லை என்றும் மேற்படி குறிப்பாணை ஆவணத்திலேயே நீதிமன்றத்தை நாட உத்தரவிட்டுள்ள நிலையில் வருவாய்துறையினரின் பங்கு அத்தோடு முடிந்து விடுகிறது என்றும் சொல்லப்பட்டிருந்தாலும் அசல் வழக்கானது தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் பரிகாரத்திற்காக மனுதாரர்/வாதியால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரருக்கு போதிய வாய்ப்பை வழங்குவது நீதியின் பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், இம்மனுவில் கண்டுள்ள சாட்சியின் சாட்சியம்

மற்றும் ஒப்படைக்க கோரும் ஆவணங்கள் அசல் வழக்கை இறுதியாக தீர்மானிக்க இந்நீதிமன்றத்திற்கு உதவிகரமாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்பதாலும் இம்மனுவில் மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் ஏற்கும்படியாக உள்ளதாலும் மேற்படி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிர்மனுதாரர்களுக்கு போதிய வாய்ப்பும் வசதியும் இருப்பதாலும் இரு தரப்பினர்களுக்கும் இடையே உள்ள பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்றே இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.10.17 17:35:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.10.17 17:35:46 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.